நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 256 /2024**

**P.W. 4 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுபடையாச்சி |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 4 |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், டிசம்பர் மாதம், 02–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.40AM.

1. நான் தற்போது நங்கவள்ளியில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை நான் சம்பவ இடம் சென்றபோது இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் ராமலிங்கம், திருநாவுக்கரசு ஆகியோர் சேர்ந்து கட்டையால் சேதுவராயனின் முதுகில் அடித்தார்கள்.

மாரியம்மாள் குமுதவள்ளியை அடித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. புகார்தாரர் குடும்பத்திற்கும்,எதிரிகளின் குடும்பத்திற்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது மற்றும் இது சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பது தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சம்பந்தமான இடத்தில்தான் எதிரிகள் குமுதவள்ளி, சேதுவராயன், தமிழ்செல்வன் ஆகியோர் பூண்டுகளை பிடுங்கி கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். அது எதிரிகளுக்கு சொந்தமான இடம் தான்.

2. அதனால் மாரியம்மாள் எதிரிகளிடம் வழக்கு இருக்கும்போது வேலை செய்ய வேண்டாம் என்று சொல்லி மாரியம்மாளை கெட்ட வார்த்தையால் எதிரி குமுதவள்ளி திட்டி கையால் அவரது முதுகில் அடித்தார் என்றும் எதிரி சேதுவராயன் அ.சா.1ன் வலது அள்ளையில் காலால் எட்டி உதைத்தார் என்றும், அதை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. சண்டையை தடுக்க வந்த அ.சா.1ன் மகன் ராமலிங்கத்தை எதிரி சேதுவராயன் கெட்ட வார்த்தையால் திட்டி கீழே கிடந்த கட்டு கம்பியை எடுத்து கையில் சுற்றி அவருடைய பின் மற்றும் முன் கழுத்தில் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது தம்பி மனைவி மற்றம் அவருடைய மகன்கள் என்றால் சரிதான். அதனால் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.00PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 256 /2024

## P.W. 5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தவமணி |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுபடையாச்சி |
| கிராமம் | : | கணக்குப்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | 63 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், டிசம்பர் மாதம், 02–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.00PM.

1. நான் தற்போது கணக்குபட்டியில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் குமுதவள்ளி மற்றும் சேதுவராயன் எனது தம்பி மனைவி மற்றும் மகன் ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை நான் சம்பவ இடம் சென்றபோது இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் ராமலிங்கம், திருநாவுக்கரசு

ஆகியோர் சேர்ந்து கட்டையால் சேதுவராயனின் முதுகில் அடித்தார்கள். மாரியம்மாள் குமுதவள்ளியை அடித்தார். போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள்.அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான்.( **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. புகார்தாரர் குடும்பத்திற்கும்,எதிரிகளின் குடும்பத்திற்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது மற்றும் இது சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பது தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சம்பந்தமான இடத்தில்தான் எதிரிகள் குமுதவள்ளி, சேதுவராயன், தமிழ்செல்வன் ஆகியோர் பூண்டுகளை பிடுங்கி கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். அது எதிரிகளுக்கு சொந்தமான இடம் தான்.

2. அதனால் மாரியம்மாள் எதிரிகளிடம் வழக்கு இருக்கும்போது வேலை செய்ய வேண்டாம் என்று சொல்லி மாரியம்மாளை கெட்ட வார்த்தையால் எதிரி குமுதவள்ளி திட்டி கையால் அவரது முதுகில் அடித்தார் என்றும் எதிரி சேதுவராயன் அ.சா.1ன் வலது அள்ளையில் காலால் எட்டி உதைத்தார் என்றும், அதை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. சண்டையை தடுக்க வந்த அ.சா.1ன் மகன் ராமலிங்கத்தை எதிரி சேதுவராயன் கெட்ட வார்த்தையால் திட்டி கீழே கிடந்த கட்டு கம்பியை எடுத்து கையில் சுற்றி அவருடைய பின் மற்றும் முன் கழுத்தில் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக 05.07.2022ம் தேதி மதியம் 12.00 மணி அளவில் சம்பவ இடம் வந்த போலீசார் அங்கிருந்த ராகுல்காந்தி மற்றும் எனது முன்னிலையில் சம்பவ இடத்தை படம் வரைந்து எழுதி அதில் உள்ள விவரங்களை எழுதி படித்து காண்பித்த பிறகு தான் அதில் கையெழுத்து

செய்தோம் என்றால் சரியல்ல.

4. எதிரிகள் எனது தம்பி மனைவி மற்றும் அவருடைய மகன்கள் என்றால் சரிதான். அதனால் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.07PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**